# SMILE OF BEAUTY

# அழகின் சிரிப்பு



INSTITUTE OF ASIAN STUDIES,
CHEMMANCHERRY, CHENNAI - 600 119.

# SMILE OF BEAUTY

# அழகின் சிரிப்பு

*General Editors*

**Dr. SHU HIKOSAKA, Dr. G. JOHN SAMUEL**

*Edited and Translated*
*by*

**Dr. P. PARAMESWARAN**

**INSTITUTE OF ASIAN STUDIES,**
**CHEMMANCHERRY, CHENNAI - 600 119,**
**INDIA.**

**SMILE OF BEAUTY**

Editorial Assistance
**Dr. K. Jaya Kumar**

© **Institute of Asian Studies**

First Editon - March 1997 pp. xliv + 158
Price: Rs. **200/-** US $ **30**

Publication No: 50

**Published under the financial assistance received from the Directorate of Tamil Development of the Government of Tamil Nadu for good translations.**

**Copies can be had from**

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Chennai - 600 119,
India.

| | | |
|---|---|---|
| Phone | (Off.) | 4961662, 4960831 |
| | (Res.) | 4960085 |
| Fax | | 91-44-4960959 |

Composed by the INSTITUTE OF ASIAN STUDIES, Chennai - 600 119.
Printed by the **Pavai Printers Pvt. Ltd.**, 142, J.J.K. Road, Royapettah, Chennai - 600 014. Ph. 8532441, 8532973.

# Transliteration Table

## VOWELS

| Short | | Long | |
|---|---|---|---|
| அ | a | ஆ | ā |
| இ | i | ஈ | ī |
| உ | u | ஊ | ū |
| எ | e | ஏ | ē |
| ஒ | o | ஓ | ō |

| | | | |
|---|---|---|---|
| ஐ | ai | ஔ | au |

## *ĀYTAM*

k̲

## CONSONANTS

| Hard | | Soft | | Medial | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க் | k | ங் | ṅ | ய் | y | ஷ் | ṣ |
| ச் | c | ஞ் | ñ | ர் | r | ஸ் | s |
| ட் | ṭ | ண் | ṇ | ல் | l | ஜ் | j |
| த் | t | ந் | n | வ் | v | ஹ் | h |
| ப் | p | ம் | m | ழ் | ḻ | க்ஷ் | kṣ |
| ற் | ṟ | ன் | ṉ | ள் | ḷ | | |

## CONTENTS


| | | | |
|---|---|---|---|
| i | நூலும் அதன் மொழி பெயர்ப்பும் - ஒரு சிறு குறிப்பு | | v |
| ii | A Note on the Work and its Translation | | vii |
| iii | முன்னுரை | | x |
| iv | Introduction | | xxvii |
| 1 | அழகு | Beauty | 1 |
| 2 | கடல் | Sea | 4 |
| 3 | தென்றல் | Breeze | 11 |
| 4 | காடு | Forest | 18 |
| 5 | குன்றம் | Hillock | 25 |
| 6 | ஆறு | River | 32 |
| 7 | செந்தாமரை | Red Lotus | 39 |
| 8 | ஞாயிறு | Sun | 46 |
| 9 | வான் | Sky | 53 |
| 10 | ஆல் | Banyan | 60 |
| 11 | புறாக்கள் | Doves | 67 |
| 12 | கிளி | Parrot | 74 |
| 13 | இருள் | Gloom | 81 |
| 14 | சிற்றூர் | Hamlet | 88 |
| 15 | பட்டணம் | City | 93 |
| 16 | தமிழ் | Tamil | 98 |
| | Text in Transliteration | | 105-148 |
| | பாட்டு முதற்குறிப்பு | | 149-151 |
| | சொல்லடைவு | | 152-158 |

## நூலும் அதன் மொழி பெயர்ப்பும் - ஒரு சிறு குறிப்பு

'ஓர் அழகான பொருள் எஞ்ஞான்றும் இன்பமே' என்றார் ஜான் கீட்ஸ். ஐயத்திற்கிடமின்றி அழகுமிக்க இயற்கையின் ஏறத்தாழ எல்லா வடிவங்களும் தோற்றங்களும் பாரதிதாசனின், (1891-1964) **அழகின் சிரிப்பு**-ல் மிகச்சிறந்த கவிதைவடிவில் வரையப் பெற்றுள்ளன.

**அழகின் சிரிப்பு** ஒவ்வொன்றும் எட்டு வரிகளுள்ள 153 கவிதைகளால் ஆனது. முதல் மூன்று கவிதைகள் இயற்கையழகைப் பொதுப்படையாகப் பேசுகின்றன. அதன்பின் கடல், தென்றல், காடு, குன்றம், ஆறு, செந்தாமரை, ஞாயிறு, வான், ஆல், புறாக்கள், கிளி, இருள், ஊர், பட்டணம், தமிழ் ஆகிய ஒவ்வொன்றைப் பற்றியும் முறையே பத்துப்பத்துக் கவிதைகள் மிக அழகான விளக்கங்கள் அளிக்கின்றன.

**அழகின் சிரிப்பு** பாரதிதாசனின் மிகச்சிறந்த படைப்பு என்பது என் கணிப்பாகும். புரட்சிக்கவிஞரும் பாரதியின் முக்கிய சீடருமான இவர் தம் மற்றைய எல்லா நூல்களையும் விட இதில் ஒரு தூய கவிஞராகத் (pure poet) திகழ்கின்றார். இச்சிறிய இனிய நூல் விழுமிய கருத்தும் மீதுயர் நடையும் பெற்று இலங்குகின்றது.

**அழகின் சிரிப்பு** எள்ளளவு ஐயத்திற்கும் இடமின்றிக் கவிஞரின் சிறப்பான கூர்நோக்கிற்கும் ஆற்றலுக்கும், இயற்கையழகோடு தன் ஆன்மா ஆனந்தப்பரவசத்தோடு இணைந்ததற்கும், கவிதத்துவ வெளிப்பாட்டில் அவர் காட்டிய மகிழ்ச்சிமிக்க உயரங்களுக்கும் சிறந்த சான்றாக அமைவதைக் காணலாம்.

**அழகின் சிரிப்பு**-ன் ஆங்கில மொழிபெயர்ப்பு 1976இல் நிறைவேறியது. என்னால் இயன்றவரை நன்றாகச் செய்துள்ளேன் என்று நான் உணரும் வரை பல முறை மொழி பெயர்ப்பைச் செம்மைப்படுத்த முயன்றுள்ளேன். மூலநூலின் சிறப்பை வெளிப்படுத்த என்னால் இயன்றவரை முயன்றாலும், முப்பதாண்டுகளுக்கும் மேலான ஆசிரியப் பணி அனுபவமும் படிக்கும் பழக்கமும் மொழிபெயர்ப்பில் எனக்குத் துணை நின்றாலும் மூலநூலின் மேன்மையினை நான் உணராமலில்லை.

இம் மொழிபெயர்ப்பில் பயன் படுத்தப்பட்டுள்ள தாவரங்கள், விலங்குகளைப் பற்றிய சொற்களுக்கு ஆங்கிலத்தில் சரியான சொற்களைப் பெற, கீழ்க்காணும் நூல்கள் எனக்கு உதவின:

1. சென்னைப் பல்கலைக்கழகம் பதிப்பித்த **தமிழ் அகராதி** - ஆறு தொகுதிகள்.

2. 1915ஆம் ஆண்டு சென்னை அரசாங்கததால் பதிப்பிக்கப்பெற்ற, A.W. லூஷிங்டன், (வனத்துறை அதிகாரி, வடக்கு வட்டம், சென்னை) அவர்களால் எழுதப்பெற்ற **சென்னை இராஜதானியிலுள்ள மரங்கள், புதர்கள், செடி கொடிகள் ஆகியவற்றின் தமிழ்ப் பெயர்கள்** தொகுதி I, II-A மற்றும் II-B ஆகிய நூல்கள்.

எனது மொழிபெயர்ப்பு **அழகின் சிரிப்பு** பாரதிதாசனின் 94வது பிறந்தநாளைக் (29-04-1984) குறிக்கும் வகையில் பாரதிதாசனின் **குயில்** என்ற இதழின் சிறப்பு வெளியீட்டில் முதன் முதலாக நூல் முழுவதும் தமிழிலும் ஆங்கில மொழிப்பெயர்ப்புடனும் திருமதி கோ அமுதவல்லி (கவிஞரின் ஒரே மகன் வழிப் பேத்தி) அவர்களால் வெளியிடப்பெற்றது. பின்பு, கவிஞரின் மகனான மன்னர் மன்னன் அவர்கள் அதனைத் தனி நூலாகவும் வெளியிட்டார்.

இந்நூலின் ஆங்கில மொழி பெயர்ப்புக்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள அரிஜோனா மாநிலத்திலுள்ள உலகப் பல்கலைக்கழகம் ஏப்ரல் 1984இல் எனக்கு இலக்கியத்தில் பண்பாட்டு முனைவர் பட்டம் அளித்துச் சிறப்புச் செய்தது.

**அழகின் சிரிப்பு**-ன் என் ஆங்கில மொழிபெயர்ப்பு, நூல்வடிவில் வந்த பின்பும் திருப்தியுறாதவனாய், மொழிபெயர்ப்பை அவ்வப்பொழுது திருத்தம் செய்து கொண்டே இருந்தேன்.

தற்பொழுது இத்திருத்தப் பதிப்பை நூலாக்கலாம் என்று உணர்கிறேன்.

நான் தற்பொழுது பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற ஆசியவியல் நிறுவனத்தின் மதிப்பிற்குரிய இயக்குநர்கள் முனைவர் ஷு ஹிகோசகா அவர்களும், முனைவர் ஜி. ஜான் சாமுவேல் அவர்களும் இதை நிறுவனத்தின் வெளியீடாகக் கொணர்ந்து என்னைப் பெருமைப் படுத்தியுள்ளனர். இந்நிறுவனத்தின் பல்வேறு துறைகளில் மிக நல்ல பணிகள் நடைபெற்று வருவதைக் காண என் உள்ளம் மகிழ்ச்சியுறுகின்றது.

**சென்னை - 600 119,** **பா. பரமேஸ்வரன்**
**19-03-1997.**

## A Note on the Work and its translation

'A thing of beauty is a joy for ever', says John Keats. And almost all forms and aspects of Nature, which are without doubt beautiful, are recast and portrayed in Bharathidasan's (1891-1964) **Smile of Beauty** in brilliant poetry.

**Smile of Beauty** consists of 153 stanzas, each eight lines long. First three stanzas speak of beauty in general. Then follows brilliant description, in ten stanzas each, of sea, breeze, forest, hillock, river, red lotus, sun, sky, banyan, doves, parrot, gloom, hamlet, city and Tamil.

I consider **Smile of Beauty** of Bharathidasan his masterpiece. This revolutionary poet and premier disciple of Bharati shines more gloriously as a pure poet here than in any other of his works. Theme and style have their own sublimity in this short but sweet work.

**Smile of Beauty** proves beyond a shadow of doubt, the poet's powers of shrewd observation, the rapturous merger of his soul with the beauty of Nature and the happy heights that he reaches in poetic expression.

The translation of **Smile of Beauty** was completed in 1976. I went on revising my translation a number of times till I was convinced I had done my best. Though I have spared no pains to bring out the excellence of the work and though more than three decades of teaching experience and reading habit have come to my aid in my translation, I cannot but be aware of the superiority of the original.

The following reference books have helped me in finding apt words in English for the botanical and zoological terms used in this translation:

1. **Tamil Lexicon** in six volumes published by the University of Madras.

2. **Vernacular List of Trees, Shrubs and woody Climbers in the Madras Presidency** by A.W. Lushington, Conservator of Forests, Northern Circle, Madras, Volumes I, II A and II B, published by Government of Madras, 1915.

**Smile of Beauty** was first published by Mrs. K. Amuthavalli, a grand-daughter of the poet in the Pāratitācaṉ **kuyil** with all the 153 stanzas both in original and in translation, in its special issue to mark the 94th birthday of Bharathidasan (29-04-1984).

Soon afterwards, it was published as an elegant book, thanks to the efforts of Thiru. Maṉṉar Maṉṉaṉ, the illustrious and only son of the poet.

The World University in the Arizona State of the U.S.A. has honoured me for this work by awarding the Cultural Doctorate in Literature in April 1984.

Not being satisfied with the translation though it has appeared in book form, I went on revising it from time to time.

Now I feel the revised version may be brought out as a book.

Dr. Shu Hikosaka and Dr. G. John Samuel the revered Directors of the Institute of Asian Studies where I have the good fortune to serve now have honoured me by bringing it out as a publication of the Institute of Asian Studies where solid good work is being carried out in its various departments.

**Chennai - 600 119,** **P. PARAMESWARAN**
**19-03-1997.**

## நன்றியுரை

ஆசிரியரின் நன்றி

1. சில கருத்துக்கள் வழங்கியதன் வாயிலாக முன்னுரையைச் செம்மையுறச் செய்ய உதவிய டாக்டர் இ.சு. முத்துசாமி அவர்களுக்கும்,
2. நூலிலுள்ள பாடல்கள் யாவற்றின் ஒலி பெயர்ப்பையும் சரிபார்த்த, பிழைதிருத்திய டாக்டர் இரா. இராஜகோபாலன் அவர்களுக்கும்,
3. கணிப்பொறி அச்சு செம்மையுறச் செய்து தந்த திரு. ஜி. வீரபுத்திரனுக்கும்,
4. முன்னுரையை ஆங்கிலத்திலும் தமிழிலும் தட்டச்சு செய்துதந்த செல்வி. என் பவானிக்கும்.
5. நூலுக்கான அழகிய வரைபடத்தை அமைத்துத் தந்த அ. செ. நடராசன் அவர்களுக்கும்,
6. சிறந்த முறையில் நூலை அச்சிட்டுத் தந்த பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., அச்சகத்தாருக்கும்.

## Acknowledgement

The Editor thanks

(1) Dr. E.S. Muthusamy for his contribution of some points that enrich the Introduction

(2) Dr. R. Rajagopalan for checking up the transliteration and proof-reading of the whole poem.

(3) Mr. G. Veeraputhiran for his computer printing, who knows his job and has done it well.

(4) Miss. N. Bhavani for typing the Introduction both in English and Tamil.

(5) Mr. A.S. Natarajan the artist for his nice and colourful portrait.

(6) Pavai Printers (P) Ltd., for printing the text elegantly.

## முன்னுரை

### வாழ்க்கை, நூல்கள், கருத்துக்கள்

பாரதிதாசன், சுப்பிரமணிய பாரதிக்கு எட்டரையாண்டுகளுக்குப் பின் பிறந்து அவருக்குப் பின் நாற்பத்துமூன்று ஆண்டுகள் வாழ்ந்தார். பாரதியார் தமிழ்ப் புத்துணர்ச்சிக்கு விதை ஊன்றினார் என்றால் பாரதிதாசன் தன்னையே ஒரு தமிழ்ப் புரட்சிக்காரராக மாற்றிக் கொண்டார் எனலாம் தமிழரின் வாழ்வும் வளமும் தமிழின் முன்னேற்றத்தில்தான் உள்ளது' எனக் காட்டி, 'தமிழினததை ஒரு புது ஒருங்கிணைப்புக்கு ஏற்ப எழுச்சிபெற ஊக்கினார் செக்கோஸ்லோவேகியாவின் முதுபெரும் தமிழறிஞரான டாக்டர் கமில் சுவலபில், பாரதிதாசனை மிகச்சரியாக 'இருபதாம் நூற்றாண்டின் முதற்பாதியின் மிகப்பெரிய தமிழ்க்கவிஞன்' என்று அழைக்கிறார்.

கனக சுப்புரததினம் என்று அழைக்கப் பெற்ற ஒரு விண்மீன் தமிழ் இலக்கியவானில் 29-04-1891 அன்று 22-15 மணிக்குப் புதுச்சேரியில் உதித்தது. பெற்றோர்களிட்ட அப்பெயர் அவர் சுப்பிரமணிய பாரதியின் ரத்தினம் என்று குறிப்பாக விநோதமாக உணர்த்தி நிற்பதைக் கண்டு நாம் மகிழலாம்

அக்காலை, புதுச்சேரி பிரஞ்சு ஆட்சிக்குட்பட்டிருந்ததால் அவர் பிரஞ்சு மொழி படிக்க வேண்டியிருந்தது ஆயினும், அவர்தம் தமிழ் படிக்கும் ஆர்வம் கொழுந்துவிட்டு எரிந்து நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. அவருக்குச் சிறுவயதில் ஆசிரியராக வாய்த்தவர்கள் திருப்புளிச்சாமி அய்யா, பண்டிதர் P.A. பெரியசாமி மற்றும் பண்டிதர் C. பங்காரு பததர் ஆகியோர் ஆவர்.

அவர் புலவர் பட்டப்படிப்பைக் கல்வே கல்லூரியில் 1907-1908 ஆண்டுகளில் புலமைககான உதவிச் சம்பளம் (Merit Scholarship) பெற்றுப் படித்துத் தம் பதினேழரை வயதில் நாற்பது மாணவர்களில் முதல் மாணவனாகத் தேர்ந்தார்.

முததமிழில் (இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ) அவர் காட்டிய ஆர்வம் இயல்பானதும் தானே தோன்றியதுமாகும் தம் பளளிப்பருவ நாட்களிலேயே அவர் கவிதைகள் இயற்றி, அவற்றைத் தம் பள்ளித் தோழர்களுக்குப் படித்தும் பாடியும் காட்டுவார்; பள்ளி நாடகங்களில் முக்கிய பாத்திரங்களை ஏற்று நடிப்பார் அவருக்கு இனிய கம்பீரக் குரல் வாய்த்திருந்தது. பள்ளி நாடகங்களில் அவர்தம் நடிப்பு சிறப்புற்றிருந்தது. புதுச்சேரியின் இலக்கிய வட்டங்களில் அவர்தம கவிதைகள் அவருக்கென ஒரு தனி முத்திரையைப் பதிதது அவருடைய பிற்காலக் கவிதைகளுக்கு ஒரு நல்ல அடித்தளம் அமைத்துத்தந்தன.

புதுச்சேரி அரசாங்கம் அவர்தம் புலமையை அறிந்து அவருக்குக் காரைக்காலுக்கு அருகேயுள்ள நிரவி என்ற ஊரிலுள்ள ஒரு பள்ளியில் தமிழாசிரியர் வேலையை 16-07-1909 அன்று தந்தது. ஆசிரியர் என்ற முறையில் அவர் படிப்படியாக மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றோருடைய அன்பையும் ஆசியையும் பெறறார் அவருடைய அன்பு மாணவ மணிகள் அவருக்கு மிகவும் பிடித்த மாமிச உணவு, மீன், உடும்பு ஆகியவற்றைத் தங்கள் வீடுகளில் சமைத்து அளிப்பர். ஆயினும், அரசியல்வாதிகள் செய்யும் தவறுகளை அடிக்கடி அச்சமின்றிச் சுடடிக்காடடி அவர்களுடைய மனக்கசப்புக்கு இலக்கானார். இதன் விளைவாக, அவர் 37

வருடங்கள் 3 மாதங்கள் 20 நாட்கள் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் பதினான்கு முறை ஒரு பள்ளியைவிட்டுப் பல பள்ளிகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அவர் எடுத்த மொத்த விடுப்பு 1 வருடம் 3 மாதங்கள் 22 நாட்கள். இவ்வாறாக, ஆசிரியர்க்கெல்லாம் ஆசிரியராக அவர் விளங்கினாலும் அதிகார வர்க்கத்திற்கு எதிரியாகத்தான் இருந்தார்.

தமிழாசிரியரான சுப்புரத்தினம் காந்தியைப் பற்றியும், கதரியக்கத்தைப் பற்றியும் புகழ்ந்து பல பாடல்கள் இயற்றினார். எல்லாவற்றுக்கும் மேலாக, வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து 1922இல் பல பாடல்கள் புனைந்த 'மாபெரும் குற்றத்தைப்' புரிந்தார். அவர்தம் கதரைப் போற்றும் பாடல்கள் அடங்கிய **கதர் இராட்டினப் பாட்டு** என்ற நூல் 1921இல் எழுதப்பெற்று 1930இல் வெளியிடப்பெற்றது. முதல் பாட்டின் தொடக்கம் இதோ:

***அந்நியர் நூலைத் தொடோம்***
***என்றசெய்தி அறைந்திடடா புவிமுற்றும்***
***எங்கள் அறுபது கோடி தடக்கைகள்***
***இராட்டினம் சுற்றும்.***

மற்றும், கீழ்வருவதைப் போல் நாட்டுப்பற்றுப் பாடல்கள் பல புனைந்தார்:

***தாய் நிலம் போய் மற்றவரைத்***
***தலை வணங்க லாமோ? தன்***
***தலை வணங்க லாமோ? . . . . .***

இவை, அவர்தம் அலுவல் குறிப்பேட்டில் அவர் பணியைய பற்றி அவதூறாகக் குறிப்புகள் பதியக் காரணமாயின.

சுப்பிரமணிய பாரதியோடு சுப்புரத்தினத்திற்கு 1908இல் புதுச்சேரியில் ஏற்பட்ட சந்திப்பு அவர்தம் வாழ்க்கையில் ஒரு முக்கிய மாற்றம் நிகழக் காரணமாய் அமைந்தது. இதுவரை தென்றலாயிருந்த அவருடைய வாழ்க்கை புயலாக மாறியது. பாரதி **தராசு** என்ற தன் இலக்கிய இதழில் அவரை அறிமுகப்படுத்தினார்.

சுப்பு புதுச்சேரியில் பாரதி, வ.வே.சு. ஐயர், டாக்டர் வரதராஜுலு முதலிய பல விடுதலைப் போராட்ட வீரர்களைச் சந்திக்கும் நற்பேற்றைப் பெற்றார். தம்மால் ஒல்லும் வகையிலெல்லாம் அவர்களுக்கு உதவினார்; அவர்களுக்கு அடைக்கலம் தந்தார்; தம் பெற்றோர்க்குத் தெரியாமல் உணவு எடுத்துச் சென்று கொடுத்தார்; பொருளுதவி செய்தார்; போலீஸ் வேட்டையிலிருந்து அவர்களைத் தப்புவித்தார். பாரதியின் **இந்தியா** இதழைப் புதுச்சேரியில் மறைமுகமாகப் பதிப்பிக்க அவருக்கு உதவினார். சுப்புரத்தினம் அனுப்பிவைத்த துப்பாக்கிதான் மாவட்ட ஆட்சித் தலைவரான ஆஷ் துரையின் உயிரை மாய்த்தது.

'பாரதியிடம் அவர் கொண்டிருந்த அன்பின் நெருக்கத்தால் அவர் தம்மைப் 'பாரதிதாசன்' என்றே அழைக்கலானார். பாரதியின் நாட்டுப்பற்று, விடுதலை வேட்கை, அச்சமற்ற இதயம், நிமிர்ந்த நடை, கவிச் செருக்கு, கலை எல்லாவற்றிற்கும் மேலாக, ஜாதி வித்தியாசங்களைச் கண்டித்தல் ஆகியவை பார்திதாசனைப் பாரதிபால் ஈர்த்தன. தமிழ் மீதும் நாட்டின் மீதும் கொண்டிருந்த வளர்ந்து வரும் பற்று, இவற்றிற்கும் மேலாக எல்லா மக்களும் சரிநிகர் என்ற நம்பிக்கையும் பாரதிதாசனை, பாரதியைத் தன் குருவாகக் கொள்ளச் செய்தன.

இக்கால கட்டத்தில் **பாரததேவி வாழ்த்து, ஜன்ம பூமியின் சிறப்பு, காந்தி அடிகளும் கதரும், சுதந்திர தேவியும் கதரும், இராட்டினச் சிறப்பு, அன்னைக்கு ஆடை வளர்க, தேசத்தாரின் பிரதான வேலை** போன்ற பல பாடல்களை எழுதிக் குவித்தார். இப்பாடல்களும், பிரஞ்சு-இந்திய அரசியல், இந்திய விடுதலைப் போர், காந்தீயக் கொள்கைகள் ஆகியவை பற்றிய அவருடைய கட்டுரைகளும் **சுதேசமித்திரன், ஜனவிநோதினி, தேச சேவகம், தேச பக்தன், ஸ்வராஜ்யா, தேசோபகாரி, புதுவை கலைமகள், ஆனந்தபோதினி, தாய்நாடு** முதலிய சஞ்சிகைகளில் வெளியிடப்பெற்றன. இவையாவும் புதுவை கே.எஸ்.ஆர்., கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், கே.எஸ்., பாரதிதாசன் ஆகிய புனைபெயர்களில் எழுதபெற்றன.

பத்தாண்டுகளாக (1908-1918) பொருளுதவி வேண்டும்போதெல்லாம் அதைச் செய்தும், நன்றியுள்ள தோழனாகயிருந்தும் தம் குருவான பாரதிக்குப் பாரதிதாசன் உதவினார். மேலும், அவர் தம் தடக்கைகளால் அடித்தார்; கால் செருப்பால் உதைத்தார்; ஆங்கில அரசாங்கத்தின் ஒற்றர்களைத் துரத்தினார். மேலும், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் புரட்சிச் செயல்களை வேகப்படுத்துவது எவ்வாறு என்று பாரதியிடமிருந்து அறிவுரை பெறப் புதுச்சேரி வந்த மாடசாமி என்ற நாட்டுப்பற்றாளனை ஆங்கில ஒற்றர்களிடமிருந்து தப்புவிக்கப் பாரதிதாசன் அவரை முகம்மது என்ற பேராசிரியரைப் போல மாறுவேடம் பூணச்செய்து ஒரு நாட்டுப் படகில் இரவில் கடற்கரையிலிருந்து கடலுக்குள் அழைத்துச் சென்று அன்று இந்தோ-சீனாவின் தலைநகரமாயிருந்த சைகோனுக்குத் தப்பிச் செல்ல வைத்தார்.

**வந்தே மாதரம்** என்ற வங்காள சஞ்சிகையில் தோன்றியவாறு பாரத தேவியின் உருவத்தைக் களிமண் பொம்மைகளாக உருவமைத்துத் தரும்படிப் புதுச்சேரிக்கருகேயுள்ள குயவர்பாளையத்தில் வாழ்ந்து வந்த வைத்தியலிங்கப் பத்தரைப் பாரதிதாசன் கேட்டுக் கொண்டார். இக்களிமண் பொம்மைகள் மிகப் பல உருவாக்கப் பெற்று அவற்றுள் பிரஞ்சுக் கைத்துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டன. பாரதிதாசன் அவற்றை ஒரு பெட்டியில் வைத்துச் சென்னைக்குக் கொண்டு வந்தார். இக் கைத்துப்பாக்கிகள் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் போரிடப் பயன்படுத்தப்பட்டன.

இருபதுகள் வரை, அவர் மனம் நாட்டுப்பற்றிலும், கடவுள்பற்றிலும் திளைத்திருந்தது. அவர் கதர்த்துணிகளைத் தம் தோள்களில் சுமந்து வீதிவீதியாக நடந்து சென்று மக்களை அவற்றையே வாங்கி உடுத்தும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டார். அவரே அந்நாட்களில் முரட்டுக் கதரைத்தான் உடுத்தினார் என்பது சொல்லித் தெரிய வேண்டிய செய்தியல்ல. அவர் 1926இல் முருகக் கடவுளைப் போற்றி **ஸ்ரீ மயிலம் சுப்பிரமணியர் துதியமுது** என்ற பாடலை யாத்தார். இந்நூலிலுள்ள கீர்த்தனைகள் மிகச் சிறந்தவை அவர் **சிறுவர் சிறுமியர் தேசீய கீதம், தொண்டர் நடைப்பாட்டு, கதர் இராட்டினப்பாட்டு** முதலிய சிறு பாட்டுப் புததகங்களை 1930இல் பதிப்பித்தார் இந்நாள்வரை கதரைப் போற்றிப் பாட அவரை மிஞ்சிய ஒருவரையும் காணோம்!

1928ஆம் ஆண்டு அவருடைய வாழ்க்கையில் ஒரு மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அதுவரை, ஒரு காங்கிரஸ் புரட்சியாளராகவும் கடவுள் பக்தராகவுமேயிருந்த அவர் எஞ்ஞான்றும் இந்திய விடுதலையைப் பற்றியே எண்ணலானார் அதே ஆண்டில் ஒரு முறை புதுச்சேரியில் ஈ.வே. ராமசாமி பொது மக்களுக்காக ஒரு சொற்பொழிவு நிகழ்ததினார். பாரதிதாசன் அதைச் செவிமடுத்தார். பின்பு, அவர் ஈ.வே.ரா. என்னும் சக்தியால் ஈர்க்கப்பட்டார்

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, பெரியார் ஈ.வே.ரா.வே ஒரு பெரிய காங்கிரஸ் தலைவராக இருந்தார். வ.வே.சு. ஐயர் மாணவர்களுக்காகச் சேரன்மாதேவியில் ஒரு குருகுலத்தை நடத்திவந்தார். அவர் பிராமண மாணவர்களுக்கும் மற்ற மாணவர்களுக்கும் தனித்தனியே உணவு படைக்கச் செய்தார். ஈ.வே.ரா., டாக்டர் வரதராஜுலு போன்ற தலைவர்கள் எல்லா மாணவர்களுக்கும் ஒன்றாக உணவு பரிமாறுமாறு காங்கிரஸில் ஒரு தலைவரான ஐயர் அவர்களை வற்புறுத்தினர். காந்தியிடம் அவர்கள் விடுத்த கோரிக்கையும் வ.வே.சு. ஐயர் மனம் மாற அவர்கள் மேற்கொண்ட முயற்சியும் பலன் அளிக்கவில்லை. ஆகையால் இத்தலைவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகித் தன்மான இயக்கத்தை நிறுவினர். அவர்கள் விடுதலைப் போராட்டத்திலிருந்து சமூகச் சீர்திருத்தத்திற்கு முக்கியத்துவம் தரத் துவங்கினர். சமுதாயத்திலிருந்து சாதியையும் மதத்தையும் வேரோடு களைவதையே தங்கள் முக்கியப் பணியாக அவர்கள் கருதி அதற்காக அல்லும் பகலும் உழைத்தனர்.

பிரஞ்சு ஆட்சிக்குட்பட்டிருந்த புதுச்சேரியில் பாரதிதாசன் பெற்ற பிரஞ்சுக் கல்வி, இந்திய விடுதலைப் போராட்டம், சமூகத்தைப் பற்றிய பாரதியின் அச்சமற்ற பாடல்கள் ஆகியவை அவரை ஒரு புரட்சிக் கவிஞராகச் செய்தன. 1928ஆம் ஆண்டுக்குப் பிறகு அவர் தன்மான இயக்கத்தின் பகுத்தறிவுக் கொள்கைகளை மிக ஆழமாக ஈர்த்துக் கொண்டார். அன்று நிலவியிருந்த மூடப் பழக்கவழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும் வேரோடு களைவதிலும் தமிழர் மனங்களில் பகுத்தறிவுக் கருத்துக்களை வலுவாக வேரூன்றச் செய்யவும் அவர் தம்மால் இயன்றதையெல்லாம் அவருக்கு முன்போ பின்போ அவருக்கு ஈடாக வேறெவரும் செய்யாத அளவுக்கு மிகச் செம்மையாகச் செய்தார் பரம்பரை பரம்பரையாக ஒரு கருத்து அல்லது பழக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாலோ ம்திக்கப்பட்டதாலோ அதற்காகவே அதை நாம் ஏற்கவோ மதிக்கவோ வேண்டியதில்லை என்றார் அவர். சாதிக் கொடுமைகள், சமயச் சச்சரவுகள், பெண்ணடிமை, தாழ்த்தப்பட்டோர் நசுக்கப்படுதல், செல்வந்தரின் ஏதேச்சாதிகாரம் முதலிய சமுதாய, பொருளாதாரத் தீமைகளை எதிர்த்துத் தம் வாழ்நாள் முழுவதும் போர் தொடுத்தார்.

காங்கிரஸ் கட்சியிலிருந்தபோதே பாரதிதாசன் சாதிகளைச் சாடி வந்தார். **பாரதியின் மனம் - பாரதிதாசன் கவிதைகள், தொகுதி -II** (ப. 80) என்ற அவர்தம் கவிதை இதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. 1928ஆம் ஆண்டிலிருந்து அவர் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதை நிறுத்திவிட்டார். 1929ஆம் ஆண்டில், தாழ்த்தப்பட்டோருக்கும் சமநிலை வழங்கக் கோரும் பாடல்களான **தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு** என்ற நூலை வெளியிட்டார். இதில் தீண்டாமையின் கொடுமைகளை மிக ஆவேசமாகப் பாடியுள்ளார். பாரதிதாசனிடம் ஏற்பட்ட இந்த மாற்றம் பெரியார் ஈ.வே. ராவின் தீண்டாமை எதிர்ப்பால்தான் -- காந்தியின் தீண்டாமை மறுப்பாலுமல்ல, பாரதியுடன் அவர் பழகிய பத்தாண்டுகளிலும் அல்ல -- ஏற்பட்டது. அதற்குப் பின்பு அவருடைய பேச்சுக்கள் எழுத்துக்களிலெல்லாம் சாதியையும் சமயத்தையும் செம்மையாகச் சாடினார். அவர் 1930இல் **சஞ்சீவி பர்வதத்தின் சாரல்** என்ற ஒரு அதீத கற்பனையான காதல் கவிதை எழுதினார். இதிலும் மூட நம்பிக்கைகளைக் கண்டித்தார். இக்காலகட்டத்தில், குத்தூசி குருசாமி, மா. சிங்கார வேலர், பா. ஜீவானந்தம், சாமி சிதம்பரனார் போன்ற பகுத்தறிவு இயக்க முன்னோடிகளோடும் மற்றும் தமிழ் அறிஞரான மயிலை. சீனி. வேங்கடசாமி போன்றோரோடும் நெருங்கிப் பழகினார். அஞ்ஞான்று அவர் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டார் அப்பொழுதுதான் மக்கள் அவரைப் 'புரட்சிக்கவி' என்று அழைக்கத் தொடங்கினர். பாரதியுடன் சேர்ந்திருந்து தேசிய மற்றும் பக்திப் பாடல்கள் எழுதிய பத்தாண்டுகளில் அவரை யாரும் 'புரட்சிக்கவி' என அழைக்கவில்லை. 'புரட்சிக்கவி' என்ற புனைபெயர் அவரோடு பின்னிப்பிணைந்துவிட்டது.

'புரட்சிக்கவி' என்றால் அவரையே குறிக்கும்; அவருக்கு முன்பும் பின்பும் இருந்த, இருக்கின்ற நூற்றுக்கணக்கான கவிஞர்கள் ஒருவரையும் அல்ல

இருபதாம் நூற்றாண்டில் இருபதுகளில் பாரதிதாசன் வ.வே.சு. ஐயரின் **தேசபக்தன்** இதழுக்குக் கவிதைகளும் கட்டுரைகளும் எழுதித்தந்தார். பின்பு, அவரே **தேசசேவகன்** என்ற இதழை ஐந்தாண்டுகள் ஆசிரியராக இருந்து நடத்தினார். அடுத்து, **ஆத்ம சக்தி, டுப்ளே, தாய்நாடு, புதுவை முரசு** முதலிய பத்திரிகைகளை வெளியிட்டார். பெரியார் ஈ.வே.ரா. வின் **குடியரசு, ரிவோல்ட் (Revolt)** என்ற பத்திரிகைகளுக்கு கவிதைகளும் கட்டுரைகளும் வழங்கினார் **புதுவை முரசு**-ல், கே.எஸ்., நாடோடி, ஐ.ஜே., அடுத்த வீட்டுக்காரன், சுயமரியாதைக்காரன் என்கிற புனைப்பெயர்களில் கவிதைகள், கட்டுரைகள், நகைச்சுவைத் துணுக்குகள், உள்நாட்டுச் செய்திகள் ஆகியவற்றை எழுதினார். 1935இல் **கவிதா மண்டலம்** என்ற கவிதைச் சஞ்சிகையைத் தொடங்கினார். பின்பு, முழுவதும் கவிதைக்கென்று **குயில்** என்ற பத்திரிகையை நடத்தினார். அதில் மதிப்புரைகளும் விளம்பரங்களும் கூடக் கவிதை வடிவிலேயே வந்தன. அது 1947-48களில் திங்கள் இதழாகவும், 1958-60களில் வார இதழாகவும் வந்தது. **குயில்** இதழ்களில் அவர் 13 சிறுகதைகள் எழுதியுள்ளார்.

அவர் 1937இல் **புரட்சிக்கவி** என்ற சிறு கவிதை நாடகம் எழுதி வெளியிட்டார். இந்நாடகந்தான் அவருக்குப் புரட்சிக்கவி என்ற பட்டத்தைத் தந்தது என்று சிலர் தவறாக எண்ணினர்.

அவர் தமிழ்த் திரைப்படத்துறையிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் அன்று தமிழ்த் திரைப்படங்களிலும் தமிழைவிடச் சமஸ்கிருதம் மேலோங்கியிருந்தது. அவர் 1937இல் **பாலாமணி அல்லது பாக்தாத் திருடன்** என்ற திரைப்படத்திற்குக் கதை, உரையாடல் மற்றும் பாடல்கள் எழுதினார். பிற்காலத்தில் அவருடைய இனிய பல பாடல்கள் பல திரைப்படங்களில் பாடல்களாகப் பயன்படுத்தப் பெற்றன. 1938இல் **எதிர்பாராத முத்தம்** என்ற குறுங்காவியத்தை எழுதி வெளியிட்டார். பின்பு, இது **பொன்முடி** என்ற பெயரில் திரைப்படமாக வந்தது. **கவிகாளமேகம், வளையாபதி, சதிசுலோசனா, ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி, பொன்முடி, சுபத்ரா** ஆகிய திரைப்படங்களுக்கு உரையாடல், பாடல்கள் எழுதினார்.

**பாரதிதாசன் கவிதைகள் - முதல் தொகுதி** 1938இல் வெளியிடப்பெற்றது. இக்கவிதைகள் தமிழ் மனங்களில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின அவை பண்டிதர்களாலும் தற்கால இலக்கியவாதிகளாலும் சீர்த்திருத்தக்காரர்களாலும் ஒருங்கே பெரிதும் பாராட்டப்பெற்றன.

அவர் 1939இல் இரணியனைப் புகழ்ந்து **இரணியன் அல்லது இணையற்ற வீரன்** என்ற நாடகத்தை எழுதினார் அதே ஆண்டில் **இசையமுது-பகுதி I, குடும்பவிளக்கு-பகுதி I** ஆகிய நூல்கள் வெளிவந்தன. 1943இல் **பாண்டியன் பரிசு** என்ற கவிதை நாடகம் பிரசுரமாயிற்று. 1944ஆம் ஆண்டு **அழகின் சிரிப்பு, காதல் நினைவுகள், குடும்ப விளக்கு-பகுதி II**, என்கிற கவிதை தொகுப்புகள் மற்றும் **நல்ல தீர்ப்பு** என்ற நாடகமும் வெளியிடப் பெற்றன

1945ஆம் ஆண்டு அவர் எழுதிய **எது இசை? தமிழியக்கம்** ஆகிய நூல்கள் வெளியிடப் பெற்றன தமிழியக்கம் என்னும் கவிதை நூலின் முன்னுரையில், அவர் தமிழ் நாட்டிலேயே தமிழுக்குத் தாழ்ந்த இடம் கொடுக்கப்படுவதைக் குறிப்பிடுகிறார் அதில் சில சான்றுகளே காட்டுகிறார். அவர் இளைய தமிழ் ஆர்வலரைத் தமிழ் தன் பண்டைய சிறந்த நிலையை மீண்டும் அடையச் செய்யப் போராட வருமாறு வரவேற்கிறார்.

முப்பத்தேழு ஆண்டுகள் தமிழ் ஆசிரியப் பணியிலிருந்த 'அவர் நவம்பர் 1946இல் விருப்ப ஓய்வு பெறுகிறார். அதனால் அவர்தம் இடைவிடாத எழுதும் பணி தொடர்கிறது; ஒரு தமிழ்ப்புரட்சியைக் கொண்டுவரத் தம்மை அப்பணியில் தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்ளவும் அவரால் இயலுகின்றது. இவ்வாண்டில், **அமைதி** என்ற ஊமை நாடகத்தை எழுதியுள்ளார். அடுத்த ஆண்டு **சௌமியன்** என்ற மற்றொரு நாடகம் வெளியானது

28-07-1946 அன்று சென்னைப் பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்த ஒரு விழாவில் C.N. அண்ணாதுரை புரட்சிக் கவிஞருக்கு அவர்தம் தமிழ்த் தொண்டிற்காகச் சேர்ந்த நன்கொடைப் பொருளான ரூ. 25,000/- பணமுடிப்பை வழங்கினார்.

1948ஆம் ஆண்டில் அவருடைய **இந்தி எதிர்ப்புப் பாடல்கள், கடல்மேற்குமிழிகள், 'குடும்ப விளக்கு-பகுதி III, முல்லைக்காடு** என்ற கவிதை நூல்களும் **படித்த பெண்கள்** என்ற நாடக நூலும் வெளியிடப் பெற்றன.

1949ஆம் ஆண்டு, **காதலா? கடமையா?, தமிழச்சியின் கத்தி, பாரதிதாசன் ஆத்திசூடி, பாரதிதாசன் கவிதைகள்-தொகுதி II** ஆகிய கவிதை நூல்களும் மற்றும் **சேர தாண்டவம்**, என்ற நாடகமும் வெளியானதைக் காணமுடிகின்றது.

1951ஆம் ஆண்டில் **கழைக்கூத்தியின் காதல்** என்ற நாடகம், 1952இல் **இசையமுது -பகுதி II**, 1954இல் **பொங்கல் வாழ்த்துக் குவியல்**, 1955இல் **பாரதிதாசன் கவிதைகள் -தொகுதி III** ஆகியன வெளிவந்தன. தம் நூல்களைப் பதிப்பிப்பதற்காக அவர் பழனியம்மா அச்சுக்கூடத்தை நிறுவினார்.

இந்தியாவும் புதுச்சேரியும் விடுதலை பெற்ற பின்பு அரசாட்சியின் ஆதிக்கம் ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரரிடமிருந்து இந்தி பேசும் வடக்கத்தியர் கைக்கு வந்தன. அவர்கள் இந்தியை இந்தியாவின் தேசிய மொழியாக்கும் செயலில் ஈடுபட்டனர். பாரதிதாசன் தீவிர அரசியலில் நுழைந்தார். அவர் 1955இல் ஐக்கிய முன்னணியின் சார்பில் தேர்தலில் நின்று வெற்றி பெற்றுப் புதுச்சேரிச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். ஆனால் அவர் மறுமுறை 1960இல் தேர்தலில் போட்டியிட்டபோது தோற்றார். அரசியலில் அவருக்கு இருந்த பற்று மக்களிடமிருந்த அவர் பற்றை மறைத்தது. அரசியல் கட்சிகளுக்கிடையே நிகழ்ந்த சண்டை சச்சரவுகள் அவரை வேதனையடையச் செய்தன. தம் உடல்நலக்குறைவையும் பொருட்படுத்தாது அவர் இந்தி ஆதிக்கத்திற்கெதிரான தம் போர்க்குரலை உயர்த்தினார். தம் மாத ஓய்வூதியத் தொகையைக் குறித்தும் கவலைப்படாமல் அரசாங்கத்தை ஆவேசமாகத் தாக்கினார். 'தமிழுக்கு இடர் வரின் பொறுப்பதில்லை' என்று முழங்கினார்.

**தேனருவி, இளைஞர் இலக்கியம், குறிஞ்சித்திட்டு** ஆகிய கவிதை நூல்கள் முறையே 1956, 1958, 1959ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. **பாரதிதாசன் நாடகங்கள்** 1959ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது.

1960இல் திருச்சியில் கி.ஆ.பெ. விஸ்வநாதம் தொடங்கிய தமிழ்ப் புலவர் வட்டத்தில் பாரதிதாசன் ஓர் உறுப்பினர் ஆனார். ஆனால், இக்குழுவைச் சேர்ந்த கவிஞர்கள் தமிழ், இந்தி ஆகியவை குறித்த பாரதிதாசனின் கருத்துக்களை ஊக்குவிக்கவில்லை. அதோடு மட்டுமின்றி, அவர்கள் தமிழை வளர்க்க யாதும் செய்யாதது மட்டுமல்லாது தமிழுக்கு இழைக்கப்படும் தீங்கைக் குறித்து அரசாங்கத்தையும் கண்டிக்கவில்லை; மக்களையும் தூண்டவில்லை. இக்குழு முழுவதிலும் ஒலித்த ஒரே குரல் பாரதிதாசனுடையது மட்டுந்தான்.

கமில் சுவலபில் என்ற செக் நாட்டு தமிழறிஞர் பாரதிதாசன் கவிதைகள் சிலவற்றைச் தம் மொழியில் 1961இல் பெயர்த்தார்.

புதுச்சேரியிலுள்ள ஓர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருந்த பாலசுப்பிரமணியம், கவிஞரின் மருமகன் தண்டபாணி மற்றும் புவனகிரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ஆகியோரின் ஒத்துழைப்போடு கவிஞர் தம் **பாண்டியன் பரிசு**-ஐ திரைப்படமாக எடுக்க 1961இல் திட்டமிட்டார். இதற்காக அவர்கள் சென்னையில் ஓர் அலுவலகத்தை ஏற்படுத்தினர். முதலில் நடிக்க இசைந்த புகழ்பெற்ற நடிகர் சிவாஜி கணேசன் பின்பு மறுத்துவிட்டார் படமெடுக்கும் திட்டமும் கைவிடப்பட்டது

1962இல் **கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா** ஆகிய நூல்கள் வெளிவந்தன. சி இராஜகோபாலாச்சாரி தமிழ் எழுத்தாளர் பேரவையின் சார்பாக அதே ஆண்டு சென்னையில் பாரதிதாசனுக்குப் பொன்னாடை போர்த்தி கேடயத்தை வழங்கிப் பெருமைப்படுத்தினார்.

1963இல் கவிஞர் பாரதியின் வாழ்க்கையைத் திரைப்படமாக எடுக்க முயன்றார். அதில் பாரதியாக அவரே நடிக்கவிருந்தார். ஆனால் அவர் முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்தன.

இறுதி நாட்களில் அவர் உடல் வலுவிழந்தது; மனம் விரக்தியுற்றது. திரைப்படம் எடுக்கும் வேண்டாத முயற்சியில் மிகத் தேவையாகவிருந்த அவருடைய செல்வம் எல்லாம் தொலைந்தது. உடல்நலக் குறைவாலும், வறுமையாலும். வாடியபோதும் அவர் மனம் எஞ்ஞான்றும் தமிழ், தமிழர்தம் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையுமே நினைந்திருந்தது. தமிழர்களுக்கிடையே நிலவிய உட்பிரிவுகள், உட்பூசல்கள் அவர் மனத்தை உடையச் செய்தன. பணத்தைக் குவிப்பதிலேயே கண்ணாயிருந்த கட்சித் தலைவர்கள் இப்பெருங்கவிஞரின் இரங்கத்தக்க நிலையைக் கண்டுங்காணாதவாறு புறக்கணித்தனர். அரசாங்கமும் அவரிடம் அக்கறை காட்டவில்லை. இந்திய இலக்கியத்தை வளப்படுத்துவனவாகப் பயனற்ற புனைகதைகளையும், முட்டாள்தனமாக நாடகங்களையும், கற்பனைக் குப்பைகளையும் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு அரசு ஏராளமான பரிசுகளை வாரி வழங்கியது. இறவா வரம் பெற்ற அவருடைய **அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு** கூடப் பரிசு பெறத் தகுதியுடையனவாக அதன் கண்ணுக்குப் படவில்லை.

இடைவிடாது எழுதியதால் அவர் கை தளர்ந்தது; தமிழர்களின் இரங்கத்தக்க நிலையையும் அடிமைத்தனத்தையும் எஞ்ஞான்றும் உன்னி உன்னி அவர் ஆத்மா அமிழ்ந்தது; தமிழ், தமிழர் நலனுக்காக வாழ்நாள் முழுவதும் ஓயாது கர்ஜித்த அவருடைய தொண்டை பேச்சிழந்து அமைதியாயிற்று. சில திரைப்படப் பைத்தியங்கள் இப்பெருங்கவிஞரின் விரக்தி நிலையை வேட்டையாடின. அவர்கள் அவரைச் சென்னைக்குச் சென்று திரைப்படம் எடுக்கத் தூண்டினர். அவரது குழம்பிய மனம் அதற்கு இணங்கியது. முன்பு பேரரசர்களுக்கும் வணங்கியறியாத அவருடைய தலை இத்தகைய ஏமாற்றுக்காரர்கள் முன் வளைந்தது அவர்தம் உடலும் உள்ளமும் ஒருங்கே சுருங்கின. நாளொன்றுக்குப் பத்துப் பதினைந்து சுருட்டுகளைக் புகைத்த அவர் வாய் இப்பொழுது நூறு, இருநூறு சுருட்டுகளைப் புகைத்துத் தீர்த்தது. அவர் குடும்பமும் சிதைந்தது. அவருடைய உறவினர் எனப்பட்டோர் அவர்தம் சொத்துக்களைக் கணக்கெடுத்தனர். கடன்கள் ஏறின. சென்னையில் அவருடைய இறுதி நாட்கள் மிக்க மன உளைச்சலில் கழிந்தன. யாரும் அவரைக் கவனிக்கவில்லை. அவருடைய உதவியுடன்

பாரதியைப் பற்றி ஒரு திரைப்படம் எடுக்கலாம் என்று சிலர் கூறினர். அதுதான் அவர்தம் வாழ்நாளில் இறுதிக் கொள்கை என அவரை நினைக்கச் செய்து அவரை ஏமாற்றினர். வாழ்நாள் முழுவதும் தம் உடல், உள்ளம், உணர்வுகள் யாவற்றையும் தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழ் நாட்டுக்குமே அர்ப்பணித்தார் அவர். அத்தகைய வீரமிக்க அவரின் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே சிறைப்படுத்திவிட்டனர் திரைப்பட முதலீட்டாளர்கள். அவர் உடல் நலமுற ஒருவரும் உதவ முன்வராததால் அவருக்கு இதயவலி ஏற்பட்டது. அவர் பல நாட்கள் சென்னையிலுள்ள பொது மருததுவமனையிலிருந்தார். ஆக்ஸிஜனும், குளுகோசும் அவர் உடலுக்குள் செலுத்தப்பட்டன சில மந்திரிகள் அவரைப் பார்க்க மருத்துவமனைக்கு வந்தாலும் அரசாங்கத்தால் மிகுந்த கவனத்துடன் பராமரித்துப் பாதுகாக்க வேண்டிய அவர் தனியறையிலல்லாது பொது அறையில் யாரும் கவனிப்பாரற்று இருந்தார். (தம் இறுதி நாட்களில் அவர் கண்ணதாசனுடன் சேர்ந்து காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார் என்பதையும் அப்பொழுது அரசாட்சி செய்த தி.மு.க. தலைவர்களை அவர் திட்டினார் என்பதையும் நாம் நினைவு கூரவேண்டும். அவரது உடல் அடங்கிய பெட்டி மீது காங்கிரஸ் கட்சியின் கொடி போர்த்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது).

தமிழக அரசு அவரைக் காக்கத் தவறியது; தமிழர்கள் தங்கள் கடமையிலிருந்தும் தவறினர் அவர் தம் வாழ்நாளின் ஒவ்வொரு மூச்சும் தமிழுக்காக, தமிழருக்காக என வாழ்ந்த ஓர் ஒப்பற்ற உயிர்; தன் ஒவ்வொரு நரம்பையும் தமிழ், தமிழரைக் காக்க முறுக்கிய உயிர்; தன் மூளையின் ஒவ்வொரு 'செல்'லும் (Brain Cell) இடைவிடாது தமிழ், தமிழரின் நலனையே எண்ணிக் கொண்டிருந்த ஓர் அரும்பெரும் உயிர். அது அவர் பூதவுடலினின்று 21.04.1964 செவ்வாய்க் கிழமை காலை பிரிந்தது. தமிழ், தமிழரையே எண்ணியிருந்த உயிர், தன் உடல் நலத்தைப் பற்றி எண்ணவே இல்லை. அவர் கவிதைகள் தமிழர்க்கு ஒரு கேடயம்; கொழுந்துவிட்டு எரிகின்ற தமிழர்களின் உணர்வுகளுக்கு அவை நெய்யாகும். தமிழுக்கும் தமிழருக்கும் அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. அவர் வாழ்க்கை வரலாறு இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்நாட்டின் புரட்சி வரலாறாகும். அவர் தமிழ்நாட்டு விடுதலையின் கவிதையாவார். 'தமிழியக்கத்'தில் அவர் பாடிய பாடல்கள் தமிழர்கள் தம் உரிமை பெறப் பாடப்பெற்ற பாடல்களாகும். தமிழ்நாட்டு வரலாற்றில் தமிழ், தமிழர் விடுதலைக்காகப் போராடிய ஒரே கவிஞர் அவர்தான்

அவர் இறந்த மறுநாள அவர் உடல் புதுச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குப் புதைக்கப்பட்டது.

அவர் இறப்புக்குப்பின் வெளியிடப்பட்ட நாடகமாகப் **பிசிராந்தையார்** (1967), கவிதை நூல்களாகப் **பாரதிதாசன் கவிதைகள் -தொகுதி IV, காதல் பாடல்கள், குயில் பாடல்கள்** (1977), **ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது, தமிழுக்கு அமுதென்று பேர், நாள் மலர்கள், புகழ் மலர்கள், வேங்கையே எழுக** என்பனவும், நாடகமாகத் **தலைமலைகண்ட தேவர்** (1978) - என்பதுவுமாகக் காணப்படுகின்றன.

**தமிழ்க்கவிதை இலக்கியத்தில் இயற்கை**

தமிழ்க்கவிதை இலக்கியத்தில் இயற்கை நீண்ட வரலாறுடையது. சங்க காலத்தில் மக்கள் வாழ்க்கையில் இயற்கை முக்கிய பங்கு பெற்றிருந்தது. தமிழ் இலக்கியத்தின் அகம், புறம் கொள்கையில் குறிஞ்சி, நெய்தல், வெட்சி, உழிஞை முதலிய மலர்கள் ஒழுக்கத்தின்

குறியீடுகளாயின. ஓர் அரசன் அல்லது குறுநில மன்னன் அணிந்த மாலை அவன் செயலையும் அவனையும் அடையாளம் காட்டின. காட்டாக, வாகைப் பூமாலை வெற்றியின் சின்னம் ஆயிற்று; அதனால் அது கொண்டாட்டத்தின் அறிகுறியுமாயிற்று.

**சங்க இலக்கியத்தில் இயற்கை** என்னும் நூலில் முனைவர் மு. வரதராசன் இப்பொருளை ஆழ்ந்து ஆராய்ந்துள்ளார். சங்ககால மக்களுக்கு இயற்கை அறம் சார்ந்ததாகவோ ஆன்மீகமானதாகவோ படவில்லை. சங்க நூல் தொகுப்புகளில் இயற்கைபற்றிய கவிதைகள் யாவும் தற்சார்பற்றவையாகவே இருந்தன. இயற்கை வர்ணனைகளூடே கவிஞன் ஊடுருவுவதில்லை. சங்க காலத்துக் கவிஞர் இயற்கைக் காட்சிகளின் - தாவரங்கள், மிருகங்கள் - மிக நுண்ணிய விவரங்களிலெல்லாம் கவனம் செலுத்தினார். கபிலர் தம் குறிஞ்சிப் பாட்டில் 96 வகையான மலர்களை வரிசையாகச் சொல்லிச் செல்கிறார் பிற்காலத்தில் இத்தகைய பெயர்கள் அடுக்கும் முறை காவியங்களிலும் பரவியது.

சங்க இலக்கியத்தின் செழுமை இயற்கைக் காட்சி வருணனைகளில் இருந்தாலும் கூட அதன் கருப்பொருளுக்கு அடுத்தே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இயற்கை இதைவிட அதிகக் கவர்ச்சியான மனித நாடகத்திற்குப் பின்புலமாக மட்டுமே சங்கக் கவிஞருக்கு அமைந்திருந்தது என்று மு. வரதராசன் சரியாகச் சொல்கிறார். தலைவியின் இளமைக்கால விளையாடுமிடமாகவோ, காதலர்கள் தங்கள் அன்பைப் பரிமாறிக் கொள்ளத் தேர்ந்தெடுத்த மறைவிடமாகவோதான் புன்னை மரத்தின் முக்கியத்துவம் அமைகிறது.

மேலும், இயற்கை உள்ளுறை உவமமாகப் பயன்படுகிறது. அது தலைவனின் நடத்தையைக் கலையுணர்வோடு கண்டிக்கவும் அவனுக்கு ஒரு செய்தியை உருவக வாயிலாக உணர்த்தவும் பயன்படுகிறது சான்றாக,

***அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்***
***மறுகால் உழுத ஈரச் செறுவின்***
***வீட்டோடு சென்ற வட்டில் பற்பல***
***மீனோடு பெயரும் யாணர் ஊர!***

என்கிற **நற்றிணை,** 210ஆம் பாடலைப் பார்க்கலாம்

வயலில் அறுவடை முடிந்தது. ஆனால் விதைப்பிற்காக அது மறுபடியும் உழப்பெற்றது. ஒரு கூடை நெல் விதைகள் அனுப்பப்பட்டன. ஆனால் அவையாவும் பல்வகை மீன்களுடன் திரும்பிவிட்டன. உன் நாட்டின் தன்மை இத்தகையதே! என்கிற உள்ளுறைப் பொருளை மேற்கூறிய பாடல் தருகிறது.

அமைதியும் மகிழ்ச்சியும் கூடிய இல்லற வாழ்க்கையை விட்டு பரத்தையரிடம் பொய்யான இன்பத்தை நாடி வரும் தலைவனின் நடத்தையைக் கண்டிக்கப் பயன்படும் உள்ளுறை உவமம் இதுவாகும்.

* * *

பக்தி இயக்கக் காலத்தில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் இயற்கைக் கவிஞராக மட்டுமின்றி ஒப்புயர்வற்ற பக்திப்பாடல்கள் இசைத்த ஞானியாகவும் கருதப்படுகிறார். அவர் யாத்த ஒவ்வொரு பதிகத்திலும் இயற்கை வர்ணனை இடம் பெறக் காணலாம். முதல் இரண்டு வரிகளில் இயற்கையையும் அடுத்த இரண்டு வரிகளில் கடவுளையும் அவர் பாடினார். சான்றாக, ஒரு பாட்டைக் காணலாம்.

**வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர் வேங்கை**
**கொம்பார் சோலைக் கோல வண்டியாழ் செய் குற்றாலம்**

என்ற இப்பாடல் வரிகள் உயர்ந்த மலைகளின் பள்ளத்தாக்குகளில் புதுப்புது மரங்களும் மிருகங்களும் உள்ளன. நெடிய வேங்கை மரத்தைச் சுற்றிக் குற்றாலத்தில் வண்டுகள் இசைத்தபடி ரீங்காரமிடுகின்றன என்று பொருள் தருகின்றன.

மற்றக் கவிஞரைப் போலவே ஞானசம்பந்தரும் குற்றாலத்தின் இயற்கையழகில் ஈர்க்கப்பட்டவராய் அதற்குக் கவிதையில் புகழ் அஞ்சலி செலுத்தினார். சி. பாலசுப்பிரமணியன் ஞானசம்பந்தரைத் 'தமிழ் இலக்கியத்தின் வொர்ட்ஸ்வொர்த்' என்று அழைக்கிறார். ஆனால், வொர்ட்ஸ்வொர்த் சில சமயங்களில் கலை ஆர்வத்துடனும் மற்ற சமயங்களில் தத்துவார்த்தமாகவும் இயற்கைபற்றிக் கவிதைகள் யாத்துள்ளார். ஆனால் ஞானசம்பந்தருக்கு இயற்கை இவ்வாறாகவெல்லாம் இல்லை. அவருக்கு இயற்கை எஞ்ஞான்றும் சிவனுடைய ஆன்மீக இல்லத்தின் பின்புலமாகவே பட்டது.

* * *

இடைக்காலத்தில் பிரபந்தம் பாடிய சிறு கவிஞர்கள் இயற்கையை மிக்க கற்பனையுடன் பாடினர். ஒரு சான்று பார்த்தாலே போதும்:

தன் கன்றை நினைந்து சொரிந்த பசுவின்பால் வாய்க்கால்களில் பாய அவைகளிலிருந்து குதித்துத் தாவிய மீன்கள் இந்திரனின் அவையில் தேவலோக நாட்டிய மங்கையான ரம்பையின் காலடியில் வீழ்ந்தன.

கடிவாளமிடாத கற்பனை தறிகெட்டு ஓடுவதை இங்குக் காணலாம். இதனை இயற்கையைப் பற்றிய கவிதை என்று கூறுவதா?

'இயற்கையும் தமிழ்ப்புத்தார்வக் கற்பனையாளரும்' பற்றி விளக்குகையில் டாக்டர் ஜி. ஜான் சாமுவேல் தம் **The Harp and the Veena** என்ற நூலில் கூறுகிறார்:

"தங்களுடைய ஐரோப்பியத் தோழர்களைப் போலவே, பாரதி, கவிமணி போன்ற தமிழ்ப் புத்தார்வக் கற்பனைக் கவிஞர்களும் இயற்கையைத் தம் கவிதைகள் மூலம் உயிர்ப்பித்தனர்; ஆன்மீகப்படுத்தினர். இத்தகைய இயற்கைக்கு உயிரூட்டும் செயல் சங்க காலக் கவிதைகளில் காணலாகும். இயற்கையை மறை ஆற்றல் உள்ளதாகச் செய்யும் செயல் இடைக்கால பக்தி இயக்கத்தில் தோன்றியது. அதைப் போலவே, ஆன்மீகப் படுத்தும் பழக்கம் ரிக் வேதக் கவிதைகளில் காணலாம். இயற்கையைப் பற்றிய தம் பெரும்பாலான கவிதைகளுக்கான உற்சாகம் பாரதிக்கு ரிக் வேதக் கவிதைகளிலிருந்துதான் கிடைத்தது. தமிழ்ப் புத்தார்வக் கற்பனைக் கவிஞர்கள் மேற்கூறிய மூன்று போக்குகளையும் இணைத்துத் தங்கள் இயற்கை பற்றிய நவீன கவிதைகளைப் புனைந்தனர்.

தமிழ்ப் புத்தார்வக் கற்பனைக் கவிஞர்களில் ஒருவரான பாரதிதாசன் கடவுள் மறுப்புக் கொள்கையுடையவராதலால் அவர் இயற்கையை மறை ஆற்றல் உள்ளதாகச் செய்வதிலோ ஆன்மீகப் படுத்துவதிலோ ஈடுபாடு கொள்ளவில்லை. ஆயினும் அவர் இயற்கைக்கு மனித உணர்வுகள் ஏற்றி அதிலிருந்து அறம் சார்ந்த, சமுதாய, அரசியல் படிப்பினைகள் பெற்றார். அவருடைய **அழகின் சிரிப்பு** ஒரு மிகச் சிறந்த தமிழ்ப் புத்தார்வக் கற்பனையான இயற்கையைப் பாடும் கவிதையாகும். மேற்கத்தியப் புத்தார்வக் கற்பனைக் கவிஞரைப் போலவே

அன்னாரும் இயற்கை வர்ணனைகளில் தம் கருத்துககளையும் உணர்வுகளையும் புகுத்தி இயற்கைக்கு உயிரூட்டி, அதற்கென ஒரு தனி இருக்கை உண்டெனக் காட்டினார். இயற்கைப் பொருள்களிலிருந்து அறம் சார்ந்த படிப்பினைகளைப் பெறுவதில் பாரதிதாசன் வொர்ட்ஸ்வொர்த்தோடு ஒருங்கே எண்ணத்தக்கவர். வொர்ட்ஸ்வொர்த்தையும், பைரனையும் போல, பாரதிதாசனும் கவர்ச்சிகரமான இயற்கைக் காட்சிகளை, இடரும் விரக்தியும் தாக்கும் காலங்களில் அவர்க்கேற்ற புகலிடங்களாகக் கொண்டார்."

தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்க்கால விடியல் வரை, இயற்கைக்குத் தமிழ்க் கவிதைகளில் தனியிடம் இருக்கவில்லை. மேற்கத்தியத் தாக்கம், முக்கியமாக, வொர்ட்ஸ்வொர்த் காலப் புத்தார்வக் கற்பனைக் கவிஞர்களின் தாக்கத்தின் விளைவால்தான் மலரோ, மரமோ, பறவையோ, மிருகமோ ஒரு பாட்டின் தனிப் பாடுபொருளாயிற்று.

### அழகின் சிரிப்பு-ல் இயற்கை பற்றிய கவிதை

முற்காலக் கீட்ஸின் கவிதைக் கொள்கையான 'ஓர் அழகிய பொருள் என்றும் இன்பம் பயக்கும்' எனும் கூற்றுக்கு **அழகின் சிரிப்பு** ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத திகழ்கின்றது. பாரதிதாசன் கவிதைகளில் சிறப்பாக **அழகின் சிரிப்பு**-ல், சமுதாய உணர்வு, தமிழியக்கம் ஆகிய கூறுகளை விடக் கலையழகு அம்சம் அதிக முக்கியத்துவம் பெறுவதைப் படிப்படியாக ஆராயலாம்.

ஷெல்லியால் ஆழ்ந்த தாக்கம் பெற்ற பாரதி, தமிழ்க்கவிதையில் அன்றுவரை நிலவி வந்த கோட்பாடுகளில் தீவிர மாற்றங்களைக் கொணர்ந்தார்; நவீன தமிழ்க்கவிதை புத்துயிர் பெறச்செய்ய புதுமுறைக் கவிதைகளை யாத்தார். இயற்கைக்கும் தனக்கும் இடையே நிலவிய உணர்ச்சிப் பிணைப்பை வலுப்படுத்துமாறு சூரியன், காற்று, ஆறு, கடல் போன்ற பல்வேறு இயற்கைக் கூறுகளைப்பற்றிப் பல உரைநடைக் கவிதைகள் எழுதினார். அவர்தம் முதன்மைச் சீடரான பாரதிதாசன்தான் தமிழ் இலக்கியத்திலேயே இயற்கையைப் பற்றி ஒரு முழுநூல் எழுதிய முதல் கவிஞராவார்.

ஆயினும், பாரதி இயற்கை அழகைப் பராசக்தியின் உருவாக்கமாகக் காண (பாஞ்சாலி சபதம், ப. 48), அவருடைய சீடரோ இயற்கையைக் கடவுளோடு தொடர்புபடுத்தும் கொள்கையை எதிர்த்தார் (தன் குருவான பாரதி கேட்டுக் கொள்ள, பாரதிதாசன் உடனே எழுதித தன் கம்பீரமான குரலில் பாடிய 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற பாடலில் இயற்கையின் எல்லா வடிவங்களும் சக்திக் கடவுளின் வெளிப்பாடுகள்தாம் என்ற கருத்து வெளிப்பட்டாலும் கூட).

பாரதிதாசன் இயற்கையைப் பாடுவதில் தம் குருவையும் மிஞ்சி விடுகிறார். அவர் தம் **அழகின் சிரிப்பு**-ன் மூலம் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் ஒரு புது வழியைப் புகுத்தி இலக்கியப் புரட்சியைச் செய்கிறார்.

**அழகின் சிரிப்பு**-க்கு அவர் எழுதிய சுருக்கமான முகவுரையில் தாம் அந்த நூலை எழுதியதன் நோக்கத்தைக் குறிப்பிடுகிறார். தமிழர் தங்களுடைய எண்ணும் சக்திகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், தங்களைச் சுற்றியுள்ள அழகைக் கண்டு அறிந்து அதைத் தூய, கூர்மையான சொற்களில் வடிக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார். பண்டைய தமிழ் இலக்கியத்தையும் வேற்றுநாட்டார் இலக்கியத்தையும் கண்மூடிப் பின்பற்றும் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி இடவேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

**அழகின் சிரிப்பு** என்ற தலைப்பு, அதிலுள்ள கவிதைகள் இயற்கையின் பல்வேறு பொருள்களைப் பற்றியவை எனத் தெரிவிக்கின்றது. ஆயினும், அவருக்குத் தமிழ் மீதும், தமிழர் மீதும் இருந்த எல்லையற்ற பற்று அவரை இந்நூலில் இறுதி மூன்று தலைப்புகளாக இயற்கையை மட்டுமல்லாது சிற்றூர், பட்டணம், தமிழ் ஆகியவற்றையும் பாடத் தூண்டியன.

தொடக்கத்திலுள்ள அழகைப் பற்றிய மூன்று கவிதைகள் மற்ற எல்லாக் கவிதைகளையும் அறிமுகப்படுத்துவதாகக் கொள்ளலாம். அவை மனிதனைச் சுற்றியுள்ள பல்வேறு பொருள்களில் உள்ள அழகைப் பொதுவாகப் பேசுகின்றன. மற்றும் அவை தங்களைச் சுற்றியுள்ள அழகைப் பார்த்து அறிந்து பாராட்டும் திறமையை வளர்த்துக் கொள்ளப் படிப்போர்க்கு ஒரு வகைப் பயிற்சி தருவனவாகவும் விளங்குகின்றன.

முதல் பகுதி, காலங்காலமாக வியப்பு, மகிழ்ச்சி நல்கும் பொருள்களாக விளங்கும் ஞாயிறு, கடல், மலர்கள், பறவைகள், மரங்கள் முதலிய கவித்துவச் சாதாரணங்களை நிரலிடுகிறது. தன் எளிய, ஆனால் அழகிய கவிதையில் தான் உணர்ந்த மகிழ்வின் பிழிவை வெளிப்படுத்த அழகு தன்னை எவ்வாறு உந்துகின்றது என்று அக்கவிதை காட்டுகிறது.

இரண்டாவது பாடல் மக்களையும் அவர்தம் வேலைகளையும் பற்றிப் பெரும்பாலும் பேசுகின்றது. சிறு குழந்தை விழியினிலே விளங்கும் ஒளியைக் கள்ளங்கபடமற்ற அழகாகவும், நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வளைவில் செய்யப்பெறும் நாடகத்தைப் புத்திளமையின் அழகாகவும், செந்தோட்புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும் புது நடையை மனித இயக்க ஆற்றலின் அழகாகவும் வர்ணனை புரிகின்றது

மூன்றாவது பாடல் உயிருள்ளதும் உயிரற்றதுமான இயற்கைப் பொருள்களின் அழகைப் பொதுவாகப் படம் பிடிக்கின்றது. அழகின் அண்டமளாவிய தன்மையையும் என்றும் அழிவற்றிருக்கும் வெற்றியையும் பேசுகிறார் கவிஞர். பசையுள்ள பொருளிலெல்லாம் பசையாகும் அழகு, நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை.

இரண்டாவது பகுதியான **கடல்** பத்துக் கவிதைகளால் அமைந்துள்ளது. இதில் உவமைகளும் உருவகங்களும் மலிந்துள்ளன. மணல் மெத்தையைக் கீரியின் உடல் வண்ணத்திற்கு ஒப்பிடும் உவமை அழகானது. ஆனால், அம்மெத்தை மேல் நேரிடும் அலையானது கற்ற இளைஞரைப் போல் பூரிப்பால் ஏறும்; வீழும்; புரண்டிடும் என்ற கூற்றில் பொருத்தமின்மையை உணரமுடிகின்றது.

இருவிழிச் சிறகு (2 4.5), இளங்கதிர்ச் செம்பழம் (2.6.4), கடலின் புட்கள் (2.7.3), தடங்கடற் பெண் (2.10.4) ஆகியவை சிறந்த உருவகங்களில் சிலவாகும்.

அடுத்த **தென்றல்** பகுதியில் வரும் **மலர் முகத்துக் குழந்தை** (3.6.2-3) ஓர் அழகு மிக்க தொடராகும். தென்றலின் பயன் நவிலும் கவிதை, இயற்கை நிகழ்ச்சியைக் கவிதையாக்குவதற்கு ஒரு சிறந்த சான்றாகக் கொள்ளலாம்.

நான்காவதான **காடு** பகுதியில் மூன்றாவது கவிதை காட்டின் அழகை அழகாகக் கூறுகிறது. அதில் காணும் சின்னதும் பெரிதுமான வெடிப்புக்கள் முதலைகள் கிடப்பதைப்போல் இருந்தன என்ற உவமை எண்ணி எண்ணி மகிழக்கூடிய ஒன்றாகும்! வழியில் கவிஞரின் எதிரில் வந்த வேடன் பரத்துவாசன், சகோரம் ஆகிய சம்ஸ்கிருதச் சொற்களுக்கு வலியன், செம்போத்து என்ற தமிழ்ப்பெயர்கள் கூறியதைக் கேட்டு மகிழ்ந்த கவிஞர் அவனைத் 'தமிழா நீ வாழ்க' என வாழ்த்தக் காண்கிறோம்.

ஐந்தாவதான **குன்றம்** உவமை, உருவக அழகுகளால் சிறக்கக் காண்கிறோம். முதல் கவிதையே (5.1),

தங்கத்தை உருக்கி விட்ட
வானோடை தன்னி லேஓர்
செங்கதிர் மாணிக் கத்துச்
செழும்பழம் முழுகும் மாலை,
செங்குத்தாய் உயர்ந்த குன்றின்
மரகதத் திருமே னிக்கு
மங்காத பவழம் போர்த்து
வைத்தது வையம் காண!

என மாலை வானில் காணும் குன்றின் அழகை எவ்வளவு அழகாகப் பாடுகின்றது! அடுத்து வரும் (5.2) கவிதையோ, **அழகின் சிரிப்பு** முழுவதிலும் மிகச்சிறந்த உருவகங்கள் மலிந்த ஒன்றாகத் திகழ்கின்றது!

அருவிகள், வயிரத் தொங்கல்!
அடர்செடி, பச்சைப் பட்டே!
குருவிகள், தங்கக் கட்டி!
குளிர்மலர், மணியின் குப்பை!
எருதின்மேற் பாயும் வேங்கை,
நிலவமேல் எழுந்த மின்னல்,
சருகெலாம் ஒளிசேர் தங்கத்
தகடுகள் பார டாநீ!

குறத்தியின் தோற்றத்தை வர்ணிப்பதில்தான் (5.6.5-8) எத்தனை உருவகங்கள்!

குறத்தியர் கவண்எ டுத்துக்
குறிபார்க்கும் விழிநீ லப்பூ!
எறியும்கை, செங்காந் தட்பூ!
உடுக்கைதான் எழில்இ டுப்பே!

ஆறாவதாக வரும் பகுதி **ஆறு** ஆகும். அதன் ஏழாவது கவிதை வெள்ளத்தின் ஒளியையும் அழகையும் வெகு அழகாக உருவகங்கள் சிறக்க வருணிக்கக் காணலாம்:

இருகரை ததும்பும் வெள்ள
நெளிவினில் எறியும் தங்கச்
சரிவுகள்! நுரையோ முத்துத்
தடுக்குகள்! சுழல்மீன் கொத்தி
மரகத வீச்சு! நீரில்
மிதக்கின் றமரங் களின்மேல்

**ஒருநாரை வெண்டா ழம்பூ!**
**உவப்புக்கோ உவமை இல்லை.**

ஏழாவதான **செந்தாமரைப்** பகுதியில் முதல் கவிதையிலேயே குளத்துத் தண்ணீரிலே படர்ந்த தாமரை இலையையும், மேலே தண்ணீரின் துளியையும் கண்ணாடித் தரையின் மீது கண்கவர் பச்சைத்தட்டில் எண்ணற்ற ஒளி முத்துக்கள் இறைந்தது போல இருக்கக் காண்கிறார் கவிஞர் **செந்தாமரைப்** பகுதியை முடிக்கும் அழகுவரிகள் இதோ!

**பன்னூறு செழுமா ணிக்கப்**
**பறவைபோல் கூட்டப் பூக்கள்**
**இன்றெலாம் பார்த்திட் டாலும்**
**தெவிட்டாத எழிலின் கூத்தே!**

எட்டாவது பகுதியான **ஞாயிறு**-ன் ஒன்பதாவது கவிதை ஞாயிற்றாலன்றித் திங்களுக்கு ஒளி இல்லை என்ற விஞ்ஞான உண்மையைக் கவிதைக் கூற்றாக்குகிறது.

**வாழும்நின் ஒளிதான் இன்றேல்**
**வானிலா உடுக்கள் எல்லாம்**
**தாழங்காய், கடுக்காய் கள்போல்**
**தழைவின்றி அழகி ழக்கும்!**

இக்கவிதையின் பின்பாதியான நான்கே வரிகளில் ஞாயிற்றுக்கு மூன்று உருவகங்கள் கூறப்பெறுகின்றன!

**பாழ்என்ற நிலையில் வாழ்வைப்**
**பயிரிட்ட உழவன் நீபைங்**
**கூழுக்கு வேரும் நீயே**
**குளிருக்குப் போர்வை நீயே!**

ஒன்பதாவதான **வான்** பகுதியில் முதல் கவிதையிலேயே இரவில் வானில் விண்மீன்கள் தோன்றக் கூறும் காரணம் வினோதமாக இருப்பினும் அது ஏழைகளைச் சுரண்டும் செல்வந்தரின் மீது கவிஞருக்கு உண்டாகும் ஆற்றாமையையும் சினத்தையும் அறிவிக்கின்றன. தாழ்த்தப்பட்டோரின் நலனுக்காக வாதாடும் பாரதிதாசன் சினத்தோடும் நையாண்டியோடும் பாடும் பாடல் இதோ!

**மண்மீதில் உழைப்பா ரெல்லாம்**
**வறியராம்! உரிமை கேட்டால்**
**புண்மீதில் அம்பு பாய்ச்சும்**
**புலையர்செல் வராம்இ தைத்தான்**
**கண்மீதில் பகலி லெல்லாம்**
**கண்டுகண் டந்திக் குப்பின்**

**விண்மீனாய்க் கொப்ப ளித்த**
**விரிவானம் பாராய் தம்பி!**

அடுத்த கவிதையில் நிலாச் சேவல், விண்மீன் குஞ்சுகள், இருட்டுப் பூனை ஆகிய உருவகங்கள் ஒளிர்கின்றன. 'வான்' பகுதியின் முதற்கவிதை பாரதிதாசனைத் தாழ்த்தப்பட்டோரின் நலனுக்காகப் போராடும் வீரனாகக் காட்டினால், இதன் இறுதிக் கவிதை அவர் ஒரு சமத்துவவாதி என்ற உண்மையை வலியுறுத்துகின்றது.

**எத்தனை பெரிய வானம்!**
**எண்ணிப்பார் உனையும் நீயே;**
**இத்தரை, கொய்யாப் பிஞ்சு;**
**நீஅதில் சிற்றெ றும்பே**
**அத்தனை பேரும் மெய்யாய்**
**அப்படித் தானே மானே?**
**பித்தேறி மேல்கீழ் என்று**
**மக்கள்தாம் பேசல் என்னே!**

